# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 ஐப்பசி 17 திங்கட்கிழமை 03.11.2025 கதிர் 359







# தமிழ் மக்கள் கூட்டணியின் அலுவலகம் யாழ்ப்பாணத்தில் இன்று திறந்து வைப்பு








யாழ்ப்பாணம், நவ. 03

தமிழ் மக்கள் கூட்டணி கட்சியின் தலைமைக் காரியாலயம் இன்று யாழ்ப்பாணத்தில் உத்தியோகபூர்வமாக அந்தக் கட்சியின் செயலாளர் நாயகம் நீதியரசர் விக்னேஸ்வரனால் திறந்து வைக்கப்பட்டது. 7➤

# புதனன்று வவுனியாவில் கூடுகின்றது தமிழரசு!

## கட்டாயம் பங்கேற்குமாறு மத்திய குழுவின் அனைத்து உறுப்பினர்களுக்கும் அழைப்பு




வவுனியா, நவ. 03

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் விசேட மத்திய செயற்குழுக் கூட்டம் நாளைமறுதினம் புதன்கிழமை வவுனியாவில் நடைபெறவுள்ளது. 7➤

# செம்மணிப் புதைகுழிக்குள் வெள்ளம்!

## அடுத்த வருடமே மீண்டும் அகழ்வுப் பணிகள்



யாழ்ப்பாணம், நவ. 03

செம்மணி மனிதப் புதைகுழிக்குள் மழை நீர் தேங்கி நிற்பதனால் அடுத்த வருடமே மூன்றாம் கட்ட அகழ்வுப் பணிகள் முன்னெடுக்கப்படும் எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

செம்மணி மனிதப் புதைகுழியில் இருந்து இதுவரையில் இரண்டு கட்டங்களாக மேற்கொள்ளப்பட்ட அகழ்வுப் பணிகளின் போது, 240 மனித என்புக்கூட்டு எச்சங்கள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் 239 என்புக்கூட்டு எச்சங்கள் அகழ்ந்து எடுக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில் மூன்றாம் கட்ட அகழ்வுப் பணிகளுக்கான நிதி ஒதுக்கப்பட்டுள்ள நிலையில் மூன்றாம் கட்ட அகழ்வாய்வுப் பணிகளை முன்னெடுப்பது தொடர்பில் ஆராய்வதற்காக யாழ். நீதிவான் நீதிமன்ற நீதிவான் எஸ்.லெனின்குமார், சட்ட வைத்திய அதிகாரி செல்லையா பிரணவன், சட்டத்தரணிகளான நிரஞ்சன், ரனித்தா உள்ளிட்டோர் அடங்கிய குழுவினர் இன்று நேரில் சென்று பார்வையிட்டனர்.

இதன்போது புதைகுழிக்குள் மழைநீர் தேங்கி நிற்பதனால் எதிர்வரும் ஜனவரி மாதம் 19ஆம் திகதி மீண்டும் அகழாய்வுத் தளத்துக்கு விஜயம் மேற்கொண்டு, அடுத்த கட்ட அகழ்வுப் பணிகளை முன்னெடுப்பது தொடர்பில் ஆராயப்படும் எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

# சஜித் டில்லி விஜயம்



எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயமாக இன்று இந்தியாவுக்குப் புறப்பட்டார்.

சஜித் அங்கு அரச அமைச்சர்கள் மற்றும் மூத்த அதிகாரிகளைச் சந்தித்துப் பரஸ்பர நலன் சார்ந்த விடயங்களைப் பற்றி விவாதிக்கவுள்ளார்.

# 3 ஆயிரத்து 200 போதை மாத்திரைகளுடன் யாழ்ப்பாணத்தில் இரு இளைஞர்கள் கைது!



யாழ்ப்பாணம், நவ. 03

யாழ்ப்பாணம் நகரில் இளைஞர்களை இலக்கு வைத்து போதைப்பொருள் மாத்திரைகளை விற்பனை செய்யும் கும்பலைச் சேர்ந்த இருவர் இன்று கைது செய்யப்பட்டனர். சந்தேகநபர்களிடம் இருந்து 3 ஆயிரத்து 200 போதை மாத்திரைகள் பொலிஸாரால் மீட்கப்பட்டன.

யாழ். மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவு பொலிஸாருக்குக் கிடைத்த 7➤

# கிளிநொச்சியில் விசேட அதிரடிப் படையினர் மீது தாக்குதல்!

## ஐந்து பெண்கள் உள்ளிட்ட 10 பேர் கைது



கிளிநொச்சி, நவ. 03

கிளிநொச்சியில் விசேட அதிரடிப் படையின் அதிகாரிகள் குழுவொன்று தாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் ஐந்து சந்தேகநபர்களும், ஐந்து பெண் சந்தேகநபர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

சட்டவிரோத மதுபான சுற்றிவளைப்பை மேற்கொள்ளச் சென்ற கிளிநொச்சி பொலிஸ் விசேட அதிரடிப் படையின் அதிகாரிகள் குழுவொன்றின் மீது இவ்வாறு தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இராமநாதபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சுடலைக்குளம் பிரதேசத்தில் சட்டவிரோத மதுபான சுற்றிவளைப்பை நடத்திச் 7➤

- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -



## ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளியான சமபோஷ கைது

கொழும்பு, நவ.3

ஒழுங்கமைக்கப்பட்ட குற்றக் கும்பல் உறுப்பினரான சமபோஷ என்ற மதுசங்க என்பவரை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சந்தேகநபர் கொழும்பு வடக்கு குற்றத் தடுப்புப் பிரிவால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர் ஒழுங்கமைக்கப்பட்ட குற்றவாளியும் பாரியளவான போதைப்பொருள் கடத்தல்காரருமான ‘வெல்லே சாரங்கா’ என்ற கமகே சாரங்கா பிரதீப்பின் நெருங்கிய கூட்டாளி என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

கிராண்ட்பாஸ் பகுதியில் சந்தேகநபர் கைது செய்யப்பட்டுள்ள நிலையில், அவரிடம் இருந்து 26 கிராம் 890 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

சந்தேகநபர் ஐந்து கொலைகளுடன் தொடர்புடையவர் என்றும் பொலிஸார் தெரிவிக்கின்றனர். (ஐ)

## வனப் பாதுகாப்பு கூட்டு செயல்பாட்டுப் பிரிவு இன்று முதல்

கொழும்பு, நவ.3

இயற்கை வன வளங்களைப் பாதுகாக்கும் நோக்கில், ‘வனப் பாதுகாப்பு’ கூட்டு செயல்பாட்டுப் பிரிவு இன்று (03) முதல் செயற்படுத்தப்படவுள்ளதாக சுற்றாடல் அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த செயல்பாட்டுப் பிரிவு 24 மணி நேரமும் இயங்கும் 1995 என்ற துரித தொலைபேசி இலக்கம் ஊடாகச் செயற்படுத்தப்படும்.

சுற்றாடல் அமைச்சின் கீழ் நிறுவப்படும் இந்த பிரிவில் வனவிலங்கு பாதுகாப்பு திணைக்களம், வனப் பாதுகாப்பு திணைக்களம், பொலிஸ் விஷேட அதிரடிப்படை மற்றும் முப்படையின் பிரதிநிதிகள் அங்கம் வகிப்பார்கள். இதன் மூலம், இலங்கையின் வனப் பகுதிகளுக்கு ஏற்படும் சேதங்கள் மற்றும் அது தொடர்பான தகவல்களை பொதுமக்கள் வழங்க முடியும் எனவும் அமைச்சு தெரிவித்துள்ளது. அதிகரித்து வரும் வனக் குற்றங்கள் தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கும், அந்தக் குற்றங்களைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும், பொதுமக்கள் நம்பகத்தன்மையுடன் தகவல்களை வழங்கக்கூடிய பின்னணியை உருவாக்குவதற்கும், முப்படையினர், விஷேட அதிரடிப்படை, வனவிலங்கு பாதுகாப்பு மற்றும் வனப் பாதுகாப்புத் திணைக்களங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அதிகாரிகளைக் கொண்ட இந்த செயல்பாட்டுப் பிரிவைச் செயற்படுத்த எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்கமைய, இந்த செயல்பாட்டுப் பிரிவை சுற்றாடல் அமைச்சர் வைத்தியர் தம்மிக பட்டபெந்தி மற்றும் பிரதி அமைச்சர் என்டன் ஜயக்கொடி ஆகியோரின் தலைமையில் இன்று திறந்து வைக்கப்படவுள்ளது. (ஐ)



SUHATHEHAM ATHULARSAALAI (PVT) LTD
சுகதேகம் ஆதுலர்சாலை (பீவீட) எல்டீடி
Neithal Beach city, Navatkuli, Jaffna
Company No- PV0031448

சித்த, ஆயுர்வேத, மேற்கத்ய இணைந்த மருத்துவ சேவை

Opening Hours - 9.00 am - 5.00 pm
Monday - Saturday

Treatment for Following Diseases
- Joint disorders சகல விதமான மூட்டுவாதங்கள்
- Paralysis பாரிசவாதம்
- Skin diseases தோல் நோய்கள்
- obesity உடற்பருமன்
- Gynecological problems - பெண்ணியல் நோய்கள்
- A norectal diseases மூல வருத்தம்
- Diabetic Mellitus நீரிழிவு
- Diabetic foot ulcers - நீரிழிவு புண்கள்
- Vericose vein Kidney stone சிறுநீரககல்
- Hypertension உயர்குருதியமுக்கம்
- cholesterol கொலஸ்திரோல்
- GGIT disorders சமிபாட்டுத் தொகுதியுடன் தொடர்பான நோய்கள்

இலவச மருத்துவ முகாம்
* போயா தினங்களில் காலை 9 மணி தொடக்கம் மாலை 5.30 மணி வரை நடைபெறும்.
* இலவசமாக குருதியமுக்கம் நிறை, உயரம், உடற்திணிவுச்சுட்டி என்பவற்றை அளவிட முடியும்

Special Treatments
- Full body Therapy
- Head Massage
- Foot Massage -
- Herbal Medicated Bath
- Decoction Bath
- Shirod hara
- skin care therapy
- Nasya
- wellness treatment through yoga & counselling
- Leech Therapy

அனைத்து விதமான குழந்தைகளுக்கான மூலிகைத் தாவரங்கள், கோரோசனை மாத்திரைகள், கிரந்தி எண்ணை என்பனவனற்றை இங்கு பெற்றுக்கொள்ளலாம்

Other activities ஏனைய சேவைகள்
Nursery Garden -
Medicinal Plants (மூலிகை தாவரங்கள்)
Medicinal leach (லீச் அட்டை வளர்ப்பு)

Neithal Beach city
Amman Kovil Road,
Navatkuli Jafina

Contact No-0762942218

# யாழ். பொதுசன நூலகத்தை பார்வையிட்ட அரசியல் கட்சிகளின் இளம் தலைவர்கள்



யாழ்ப்பாணம் நவ.3

இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் அழைப்பின் பேரில் வருகைதந்த தென்னிலங்கையைச் சேர்ந்த அரசியல் கட்சிகளின் இளம் தலைவர்கள் இன்றையதினம் யாழ்ப்பாணம் பொதுசன நூலகத்தை பார்வையிட்டனர்.

14 அரசியல் கட்சிகளை பிரதிநிதித்துவப்படுத்தும் 24 பேர் கொண்ட இளம் அரசியல் தலைவர்கள் குழு இந்தியாவிற்கு விஜயம் செய்ததன் தொடர்ச்சியாக வடக்கு மாகாண விஜயம் மேற்கொண்டனர்.

இவ் விஜயத்தின் போது வடக்கு மாகண மக்கள் எதிர்நோக்கும் பிரச்சனைகள் தொடர்பில் கள விஜயங்கள் மேற்கொள்ளும் நோக்கத்துடன் வருகைதந்த குறித்த குழுவினர்,

நேற்றையதினம் யாழ்ப்பாணத்திலிருந்து காங்கேசன்துறை வரை புகையிரதத்தில் பயணித்து காங்கேசன்துறை துறைமுகம், மயிலிட்டி மீன்பிடித்துறைமுகம் மற்றும் பலாலி விமான நிலையம் ஆகியவற்றுக்குச் சென்று அங்குள்ள அபிவிருத்தி நிலைமைகள் தொடர்பாக ஆராய்ந்தனர். (ஐ)

## SLS முத்திரை இல்லை என்றால் விற்பனைக்குத் தடை! நுகர்வோர் அதிகாரசபை




கொழும்பு, நவ.3

உள்ளூரில் உற்பத்தி செய்யப்படும், 'உடனடியாகப் பருகக்கூடிய' அனைத்துப் பழச்சாறு பானங்களும் கட்டாயமாக இலங்கைத் தரச் சான்றிதழ் **(SLS – Sri Lanka Standards)** முத்திரையுடன் இருக்க வேண்டும் என நுகர்வோர் விவகார அதிகாரசபை **(CAA)** நினைவூட்டியுள்ளது.

அத்துடன், இதே வகையைச் சேர்ந்த இறக்குமதி செய்யப்பட்ட பழச்சாறு பானங்கள், விற்பனைக்கு வருவதற்கு முன்னர், இறக்குமதி பரிசோதனைத் திட்டத்தின் கீழ் முன் அனுமதி பெற வேண்டியது அவசியம் எனவும் நுகர்வோர் விவகார அதிகாரசபை தெரிவித்துள்ளது.

குறித்த விதிமுறை, தேசிய உணவு மற்றும் பானத் தரச் சான்றிதழ் தேவைகளுக்கு இணங்க, நுகர்வோருக்கான தயாரிப்பு பாதுகாப்பும் தரத்தையும் உறுதி செய்வதை நோக்கமாகக் கொண்டதாகும்.

அத்துடன் இது குறித்து நுகர்வோர் தங்களின் முறைப்பாடுகளை, 1977 என்ற நுகர்வோர் விவகார ஆணையத்தின் இலக்கத்திற்குத் தொடர்பு கொண்டு அறிவிக்க முடியும். (ஐ)

## மூங்கிலாறில் கஞ்சா விற்பனை 24 வயது இளைஞன் வாள்களுடன் கைது!

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவிற்குட்பட்ட மூங்கிலாறு தெற்கு உடையார்கட்டு பகுதியில் வீட்டில் கஞ்சா விற்பனை இடம்பெறுவதாக புதுக்குடியிருப்பு விசேட புலனாய்வு பிரிவினருக்கு கிடைக்கபெற்ற இரகசிய தகவலையடுத்து நேற்று விஷேட சோதனை நடவடிக்கை மேற கொள்ளப்பட்டது.

அச்சோதனையின் போது குறித்த வீட்டில் இருந்து 1 கிலோகிராம் 250 கிராம் கஞ்சாவும் இரண்டு வாள்களும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன. இதனுடன் தொடர்புடையதாக 24 வயதுடைய இளைஞன் ஒருவரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

குறித்த இளைஞனுக்கு ஏற்கனவே கஞ்சா தொடர்பான வழக்குகள் இருப்பதாகவும், ஆரம்ப விசாரணைகளில் தெரியவந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்நிலையில், கைது செய்யப்பட்ட இளைஞனையும் மீட்கப்பட்ட கஞ்சா பொதியையும் முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தில் முற்படுத்தவுள்ளதாகவும். இது தொடர்பான மேலதிக விசாரணைகளை புதுக்குடியிருப்பு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

## 2028ஆம் ஆண்டு அரிசி இறக்குமதி முழுமையாக நிறுத்தப்படும் – கமத்தொழில் அமைச்சர் தெரிவிப்பு!

2028ஆம் ஆண்டு வெளிநாடுகளிலிருந்து அரிசி இறக்குமதி முழுமையாக நிறுத்தப்படும் என கமத்தொழில் கால்நடைவளங்கள் காணி மற்றும் நீர்பாசன அமைச்சர் கே.டி.லால்காந்த தெரிவித்தார்.

தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்தினால் மட்டக்களப்பு போரதீவுப்பற்று பிரதேச செயலகப்பிரிவுக்குட்பட்ட பகுதிக்குட்பட்ட பிரதான நீர்பாசனகுளமான நவகிரி ஆற்றைகுறுக்கிட்டு அமைக்கப்பட்டுள்ள அணைக்கட்டு மற்றும் அணைக்கட்டுடனான பாலத்துடன் கூடிய அணைக்கட்டு என்பனவற்றின் திறப்பு விழா இன்று மாலை நடைபெற்றது.



நவகிரி ஆற்றைக்குறுக்காக மக்களினதும் விவசாயிகளினதும் போக்குவரத்தினை இலகுவடுத்தும் வகையில் கண்ணியம்மை மற்றும் கல்வெட்டை அணைக்கட்டுக்கு இடையில் போக்குவரத்தை மேற்கொள்ளும்பொருட்டு நவகிரி ஆற்றுக்கு குறுக்காக அமைக்கப்பட்ட பாலத்துடன் கூடிய அணைக்கட்டு திறந்துவைக்கப்பட்டது.

கமத்தொழில் கால்நடைவளங்கள் காணி மற்றும் நீர்பாசன அமைச்சின் 86.9 மில்லியன் நிதி ஒதுக்கீட்டின் மூலம் இந்த அணைக்கட்டு,அணைக்கட்டுடன் கூடிய பாலம் திறந்துவைக்கப்பட்டது.

நீர்பாசன பணிப்பாளர் நாயகம் எந்திரி. அஜித் குணசேகர தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் கமத்தொழில் கால்நடைவளங்கள் காணி மற்றும் நீர்பாசன அமைச்சர் கே.டி.லால்காந்த பிரதம அதிதியாக கலந்துகொண்டு திறந்துவைத்தார்.

இந்த நிகழ்வில் தேசிய மக்கள் சக்தியின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கந்தசாமி பிரபு,நீர்பாசன திணைக்களத்தின் மட்டக்களப்பு மாவட்ட பணிப்பாளர் பொறியியலாளர் இப்ராஹீம்,போரதீவுப்பற்று பிரதேச செயலகத்தின் பிரதேச செயலாளர் எஸ்.ரங்கநாதன், கமத்தொழில் கால்நடைவளங்கள் காணி மற்றும் நீர்பாசன அமைச்சின் மட்டக்களப்பு இணைப்பாளர் திகநாதன் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

இந்த திட்டத்தின் மூலம் அம்பாறை-மட்டக்களப்பு மாவட்ட எல்லைப்பகுதி மக்களும் போரதீவுப்பற்று பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட விவசாயிகளும் நன்மையடைவார்கள் என இங்கு தெரிவிக்கப்பட்டது.

இதன்போது உரையாற்றிய அமைச்சர்,

2028ஆம்ஆண்டு நமது உணவுத்தேவைகளைப் பூர்த்தி செய்ய வெளிநாட்டிலிருந்து அரிசியை இறக்குமதி செய்யும் தேவையை முற்றிலுமாக நீக்க திட்டமிட்டுள்ளோம், இறக்குமதியினால் அதிகளவான பணத்தினை செலவிடுகின்றோம்.இந்த நிலைமையினை மாற்றி எமது பகுதியில் உற்பத்திகளை அதிகரித்து இறக்குமதியை தடுப்பதற்கான வேலைத்திட்டங்களை நாங்கள் முன்னெடுத்துள்ளோம்.

விவசாயத்துறையின் வழிகாட்டுதலுடன், நாட்டிற்குத் தேவையானவற்றைப் பயிரிடவும், தேவைக்கேற்ப அதிகாரிகளுடன் இணைந்து பணியாற்றவும் கடுமையாக உழைக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

நாங்கள் மிகவும் மகிழ்ச்சியான வாழ்க்கையை வாழ விரும்புகிறோம். அரசாங்கத்தின் பொறுப்பு அந்தப் பொறுப்பை நிறைவேற்றுவதுதான், வேறு எதுவும் இல்லை.

நான் ஒரு இலங்கையன், இலங்கையில் முதல் முறையாக திருட்டு, மோசடி, ஊழல் மற்றும் வீண்விரயம் ஒழிக்கப்பட்ட ஒரு அரசியலை நாங்கள் கட்டியெழுப்பியுள்ளோம்.

இந்த செயற்பாடுகளை நாங்கள் நிறுத்தப்போதில்லை.இந்த நாட்டினை தூய்மையான நாடாக மாற்றும் வரையில் எமது செயற்பாடுகள் நடைபெறும்.இந்த நாட்டிலிருந்து போதைப்பொருளும் ஊழல் மோசடிகளும் துடைத்தெறியப்படும்.

நிலையான வளர்ச்சி என்பது நமது ஆறுகளை காப்பாற்ற வேண்டும், கால்வாய்களை காப்பாற்ற வேண்டும், ஏரிகளை காப்பாற்ற வேண்டும், மணலை காப்பாற்ற வேண்டும் என்பதாகும். எனவே, அற்கு நல்ல நிர்வாகத்துடன் செய்யப்பட வேண்டும், ஆனால் இந்த நதியைப் பார்க்கும்போது, நீங்கள் அதை தெளிவாகக் காணலாம். அது நடக்கவில்லை,இப்போது நாம் அதை மாற்ற வேண்டும், சரியான மற்றும் ஒழுங்கான முறையில் செய்ய வேண்டும். இப்போது நாம் அதற்குத் தேவையான அரசியல் கலாச்சாரத்தை உருவாக்கியுள்ளோம்.

காடுகள் அழிக்கப்பட்டுள்ளன, ஆறுகள் அழிக்கப்பட்டுள்ளன, அனைத்தும் இடிந்து விழுந்துள்ளன, எனவே நான் முன்பு சொன்னது போல் நாம் மகிழ்ச்சியாக வாழ இதை சரிசெய்ய வேண்டும், ஆனால் இது ஒரு பெரிய பணி. நாட்டின் பொருளாதாரப் பக்கத்தை நாம் கட்டியெழுப்ப வேண்டும், அதில் நாம் கவனமாக இருக்க வேண்டும். வாக்குச்சாவடிகளில் இருந்து எண்ணெய் வருவதில்லை, பால் பவுடர் பந்துகளில் இருந்து வருவதில்லை.

பணம் ஒதுக்கப்பட்டு முறையாகச் செலவிடப்பட வேண்டும். நம்மிடம் அரசியல்வாதிகள், அதிகாரிகள் மற்றும் மக்கள் உள்ளனர். மூவரும் ஒரு நல்ல உணர்வுடன் ஒன்றுபட்டுள்ளனர். நாம் உழைத்தால், குறுகிய காலத்தில் இந்தப் பொருளாதாரம் நமக்குக் கிடைக்கும். சிரமங்களைத் தீர்க்க முடியும்.

போதைப்பொருள் கலாசாரம் அனைத்து இடங்களிலும் வியாபித்து காணப்பட்டது.அது பல்கலைக்கழகங்களும் அந்த நிலையை அடைந்துவிட்டன, அது ஒரு தொற்றுநோய் போல பரவி, சமூகம் சரிந்துவிட்டது. இப்போது அதையும் குணப்படுத்தத் தொடங்கிவிட்டோம். அடுத்து, கலாச்சார அம்சத்தில் கவனம் செலுத்துவோம். என்று தெரிவித்தார். (ஐ)

# பாஜகவை கண்டு அஞ்சுகிறார் பழனிசாமி 2026ல் திமுக ஆட்சி அமைக்கும்: முதல்வர் மு.க.ஸ்டாலின் பரபரப்பு பேச்சு




2026ல் திமுக ஆட்சி அமைக்கும் என முதல்வர் மு.க.ஸ்டாலின் திட்டவட்டமாக தெரிவித்துள்ளார். நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.மணி இல்லத் திருமண விழாவில் பங்கேற்ற முதல்வர் மு.க.ஸ்டாலின் பிரகதீஸ்வரன் - மது பிரதிக்ஷா ஆகியோரின் திருமணத்தை நடத்திவைத்து வாழ்த்தினார். பின்னர் பேசிய முதல்வர் சென்னையில் நேற்று அனைத்துக் கட்சி கூட்டம் நடைபெற்றது. எஸ்.ஐ.ஆர். தொடர்பாக முக்கியமான ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளோம். சீராய்வு என்ற பெயரில் ஒரு தீய செயலை, சதி செயலை தேர்தல் ஆணையம் திட்டம் தீட்டி உள்ளது. அனைத்துக் கட்சி கூட்டத்தில் பங்கேற்ற அனைவரும் உரிய அவகாசம் கொடுத்து எஸ்ஐஆர் நடத்த வலியுறுத்தினர்.

பீகாரில் செய்ததை மற்ற மாநிலங்களிலும் செய்யும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர். குறைந்த நாட்களே அவகாசம் கொடுத்து திருத்தம் செய்வது, வாக்காளர்களை நீக்குவதற்கான தந்திரம். நான் உறுதியாக சொல்கிறேன். பாஜக எப்படிப்பட்ட சதிச் செயல்களை செய்தாலும் அவர்களால் தமிழ்நாட்டில் எதுவும் செய்ய முடியாது. பீகாரில் எஸ்ஐஆர் அறிவித்தபோது முதன் முதலில் எதிர்ப்பு தெரிவித்தது திமுகதான். எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி, தேஜஸ்வி இணைந்து பீகாரில் மிகப் பெரிய போராட்டத்தை முன்னெடுத்தனர். முக்கியத்துவம் வாய்ந்த அனைத்துக் கட்சி கூட்டத்தில் கூட பிரதான எதிர்க்கட்சியான அதிமுக பங்கேற்கவில்லை.

எதிர்க்கட்சித் தலைவர் பழனிசாமி, இதில் கூட இரட்டை வேடத்தை வெளிப்படுத்தியுள்ளார். பாஜகவுக்கு பயந்து தேர்தல் ஆணையத்தை எதிர்க்கக் கூட எடப்பாடி அஞ்சுகிறார். எஸ்ஐஆரை முறைகேடு நடக்காமல் கண்காணிக்க அதிமுகவினருக்கு எடப்பாடி அறிவுறுத்தியுள்ளார். இதன் மூலம் எஸ்ஐஆரில் முறைகேடு நடக்கும் என அறிந்திருந்தும் அவரால் வெளிப்படையாக எதிர்க்க முடியவில்லை. தமிழ்நாட்டில் உள்ள பீகார் மக்கள் பேசியிருப்பது பெருமை அளிக்கிறது. பீகார் மாநில பிரச்சாரத்தில் வாக்கு அரசியலுக்காக திமுக மீது பழி சுமத்தி நாடகமாடியுள்ளார் மோடி.

பீகாரில் பேசிய கருத்தை தமிழ்நாட்டில் பேச பிரதமர் மோடிக்கு தைரியம் உள்ளதா? வந்தாரை வாழவைக்கும் தமிழ்நாடு பற்றி இந்த மண்ணில் வாழக்கூடிய எல்லாருக்கும் தெரியும். 2026 தேர்தல் முடிவு வெளியாகும் நாளில் திராவிட மாடல் 2.0 ஆட்சி அமைந்துள்ளதே என்பதே தலைப்புச் செய்தியாக இருக்கும். 2026 தேர்தல் தமிழ்நாட்டை அதிமுக, பாஜகவிடம் இருந்து காக்கும் தேர்தலாக அமையும் என்று கூறினார். (ஐ)

## கரூர் கூட்ட நெரிசலில் 41 பேர் பலி இன்று பனையூர் செல்லும் சிபிஐ விஜய்யிடம் விசாரணையா? 306 பேருக்கு சம்மன்,



கரூர் கூட்ட நெரிசலில் 41 பேர் உயிரிழந்த விவகாரம் தொடர்பாக 306 பேருக்கு சிபிஐ சம்மன் அனுப்பியுள்ளது. இதில் நேற்று சிபிஐ முன் தனித்தனியாக ஆஜரான 10 பேரிடம் துருவி, துருவி விசாரணை நடந்தது. இன்று பனையூர் செல்லும் சிபிஐ அதிகாரிகள், விஜய் மற்றும் தவெக நிர்வாகிகள் புஸ்ஸி ஆனந்த், நிர்மல்குமார், ஆதவ் அர்ஜ/னா உள்ளிட்டோரிடம் விசாரணை நடத்த திட்டமிட்டுள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

கரூரில் கடந்த மாதம் 27ம்தேதி தவெக தலைவர் விஜய் பிரசாரத்தின் போது கூட்ட நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்த வழக்கை ஐபிஎஸ் அதிகாரி பிரவீன்குமார் தலைமையிலான 6 பேர் குழுவினர், மதுரையில் கூடுதலாக வந்த சிபிஐ குழுவினர் 6பேர் என மொத்தம் 12பேர் விசாரித்து வருகின்றனர். இதையடுத்து சிபிஐ விசாரணை தற்போது சூடுபிடித்துள்ளது. இந்த நிலையில் சம்பவம் நடந்த வேலுச்சாமிபுரத்தில் கடந்த 2 நாட்களாக சாலையின் இருபுறமும் தடுப்புகளை ஏற்படுத்தி குறிப்பிட்ட தூரம் வரை 3டி லேசர் ஸ்கேனர் கருவி மூலம் அளவீடு செய்து ஆய்வு மேற்கொண்டனர். கடந்த 31ம்தேதி 6 மணி நேரம், நேற்றுமுன்தினம் (1ம்தேதி) 9 மணி நேரம் என சுமார் 15 மணி நேரம் ஆய்வு மற்றும் விசாரணை பணிகளை சிபிஐ குழுவினர் செய்தனர். இந்நிலையில் வேலுச்சாமிபுரம் பகுதியில் உள்ள மளிகைக்கடைகள், பெட்ரோல் பங்க், டிபார்ட்மெண்ட் ஸ்டோர் ஊழியர்கள், மெடிக்கல் ஷாப் , பேக்கரி கடை , ஜவுளிக்கடை உரிமையாளர்கள் மற்றும் அந்த பகுதியில் குடியிருக்கும் பொதுமக்கள் என 306 பேர்களுக்கு சிபிஐ சம்மன் அனுப்பி விசாரணைக்கு நேரில் ஆஜராகும்படி தெரிவித்து இருந்தது. அதன்படி, நேற்று கலெக்டர் அலுவலக வளாகத்தில் உள்ள பயணியர் விடுதிக்கு சம்மனுடன் வந்த 10 பேர், சிபிஐ முன் தனித்தனியாக ஆஜராகினர். அப்போது அவர்களிடம் சிபிஐ அதிகாரிகள் துருவி துருவி கிடுக்கிப்பிடி விசாரணை நடத்தினர். சம்பவம் நடந்த வேலுச்சாமிபுரத்திற்கு எத்தனை மணியில் இருந்து ரசிகர்கள் வரத்தொடங்கினார்கள், ரசிகர்களுக்காக குடிநீர் உள்ளிட்ட வசதிகள் தவெக சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டு இருந்ததா, விஜய் வருவதற்கு முன் ரசிகர்கள் எவ்வளவு பேர் கூடியிருந்தார்கள், ரசிகர்களை ஒழுங்குப்படுத்த தவெக நிர்வாகிகள் அந்த இடத்தில் இருந்தார்களா,


விஜய் எத்தனை மணிக்கு வந்தார், விஜய் பின்னால் எத்தனை வாகனங்கள் வந்தன, விஜய் பேசிக்கொண்டிருந்த போது ஆம்புலன்ஸ் வந்ததா, திடீரென கூட்ட நெரிசல் ஏற்பட்டது எப்படி என அடுக்கடுக்கான கேள்விகளை எழுப்பினர். அப்போது அவர்கள் தங்களது கருத்துக்களை தெரிவித்தனர். இதனிடையே, கரூர் கூட்ட நெரிசல் குறித்து விசாரிக்க சிபிஐ அதிகாரிகளில் ஒரு குழுவினர் இன்று சென்னை பனையூர் செல்லவும் முடிவு செய்திருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

ஏற்கனவே, கரூர் சிபிஐ அலுவலகத்தில் விசாரணைக்கு ஆஜராக தவெக பொதுச்செயலாளர் புஸ்ஸி ஆனந்த், இணை பொதுச்செயலாளர் நிர்மல்குமார் உள்ளிட்டோருக்கு சிபிஐ சம்மன் அனுப்பி இருந்தது. ஆனால் அவர்கள் ஆஜராகவில்லை. இந்நிலையில், பனையூரில் உள்ள தவெக தலைமை அலுவலகத்திற்கு செல்லும் சிபிஐ குழுவினர், புஸ்ஸி ஆனந்த், நிர்மல்குமார் மற்றும் தேர்தல் பிரசார பிரிவு பொதுச்செயலாளர் ஆதவ் அர்ஜுனா உள்ளிட்டோரிடம் விசாரணை நடத்த திட்டமிட்டுள்ளதாக கூறப்படுகிறது.

மேலும், சம்பவம் நடந்த பின் வீட்டைவிட்டு வெளியே வராமல் முடங்கி கிடக்கும் தவெக தலைவர் விஜய்யிடமும் விசாரணை நடத்த சிபிஐ திட்டமிட்டுள்ளதாக கூறப்படுகிறது. இதுவே பனையூருக்கு சிபிஐ வர முக்கிய காரணம் என்று பரபரப்பு தகவல் வெளியாகி உள்ளது.

சென்னையில் தவெக தேர்தல் பிரிவு பொது செயலாளர் ஆதவ் அர்ஜுனா வாய்ஸ் ஆப் காமர்ஸ் (குரல் வர்த்தகம்) நிறுவனம் நடத்தி வருகிறார். இந்த நிறுவனத்தில் ராம்குமார் என்பவர் பணிபுரிந்து வருகிறார். இவர், ஆதவ் அர்ஜுனாவின் தீவிர ஆதரவாளர். கரூர் சம்பவம் தொடர்பாக ராம்குமாரிடம் விசாரணை நடத்த சிபிஐ அதிகாரிகள் முடிவு செய்தனர். கரூர் காமராஜபுரம் 3வது தெருவில் ராம்குமார் வசித்து வருவதாக கிடைத்த தகவலை தொடர்ந்து சிபிஐ அதிகாரிகள் குழு, நேற்று குறிப்பிட்ட முகவரிக்கு சென்றனர். அங்கு ராம்குமார் வீடு பூட்டி இருந்தது. வீட்டை செல்போனில் போட்டோ எடுத்து கொண்ட சிபிஐ குழுவினர், வீட்டின் அருகில் மற்றும் மாடியில் குடியிருப்பவர்களிடம் ராம்குமார் குறித்து விசாரித்தனர். எத்தனை நாட்கள் தங்கியிருந்தார், எப்போதில் இருந்து வீடு பூட்டி இருக்கிறது, இப்போது ராம்குமார் எங்கே உள்ளார் என தீவிரமாக விசாரித்தனர். கரூர் சம்பவத்துக்கு பின் வீடு பூட்டி இருப்பதும், சென்னைக்கு சென்றிருக்கலாம் என்றும் அருகில் உள்ளவர்கள் தெரிவித்தனர். இதனையடுத்து சிபிஐ குழுவினர் ராம்குமாரை தேடி சென்னைக்கு செல்ல உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. (ஐ)

## தமிழக மீனவர்களின் 4 படகுகளை சிறைபிடித்து 35 பேரை கைது செய்தது இலங்கை கடற்படை!



எல்லை தாண்டி மீன் பிடித்ததாக கூறி தமிழ்நாட்டு மீனவர்கள் 35 பேரை இலங்கை கடற்படை கைது செய்தது. மேலும் 3 விசைப்படகுகள், ஒரு நாட்டுப் படகை பறிமுதல் செய்தது. தொடர்ந்து மீனவர்களிடம் இலங்கை கடற்படை போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

தமிழக மீனவர்களை இலங்கை கடற்படையினர் கைது செய்வது ஆண்டாண்டு காலமாக தொடர் நிகழ்வாக இருந்து வருகிறது. தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி துறைமுகங்களில் இருந்து மீன்பிடிக்க சென்ற மீனவர்களை, எல்லை தாண்டி மீன் பிடித்ததாக கூறி 35 பேரை இலங்கை கடற்படையினர் கைது செய்தனர்.

மேலும் மீனவர்களிடமிருந்து 3 விசைப்படகுகள், ஒரு நாட்டுப்படகு ஆகியவற்றையும் இலங்கை கடற்படை பறிமுதல் செய்தது. நாட்டுப்படகில் இருந்த 4 மீனவர்கள், 3 விசைப்படகுகளில் இருந்த 31பேர் என மொத்தம் 35 மீனவர்கள் கைது செய்யப்பட்டு, காங்கேசன்துறை கடற்படை முகாமுக்கு இலங்கை கடற்படையினர் அழைத்து சென்று நீதிமன்றத்தில் இன்று ஆஜர்படுத்தப்பட உள்ளனர். நேற்று மீன் பிடிக்க சென்ற ராமேஸ்வரம் மீனவர்களை, மீன்பிடிக்க விடாமல் இலங்கை கடற்படையினர் துப்பாக்கி முனையில் விரட்டியடித்து. இந்நிலையில் இன்று மீனவர்கள் 35 பேரை இலங்கை கடற்படை கைது அட்டூழியத்தில் ஈடுபட்டுள்ளது. (ஐ)

## “முதலமைச்சர் நாற்காலியில் மீண்டும் மு.க.ஸ்டாலினை அமர வைப்போம்” – விசிக தலைவர் திருமாவளவன் சபதம்

*“முதலமைச்சர் நாற்காலியில் மீண்டும் மு.க.ஸ்டாலினை அமர வைப்போம்” என்று விசிக தலைவர் திருமாவளவன் தெரிவித்துள்ளார்.*

*மேலும் பேசிய அவர், “திமுக நிர்வாகிகளின் களப்பணிக்கு ஈடாக விசிக நிர்வாகிகளும் உழைத்து தமிழ்நாட்டின் முதலமைச்சர் நாற்காலியில் மு.க.ஸ்டாலினை மீண்டும் அமர வைப்போம். நாடாளுமன்ற தேர்தலில் நாம் பெற்ற வெற்றியை விட சட்டப்பேரவைத் தேர்தலில் பெறப்போகும் வெற்றிதான் வரலாற்று சிறப்பு வாய்ந்தது. 234 தொகுதிகளிலும் நம்முடைய கூட்டணிதான் வெல்ல வேண்டும்,” இவ்வாறு தெரிவித்தார். (ஐ)*

# சமையலறையை விட மனமில்லையா தோழிகளே?



கீதா

சில ஆண்டுகளுக்கு முன்பு வெளிநாட்டு நண்பர் ஒருவர் காலை உணவுக்கு எங்கள் அம்மா வீட்டுக்கு வந்திருந்தார். பூரி, பொங்கல், வடை, சட்னி, இட்லி, மட்டன் குழம்பு என்று அம்மா விதவிதமாகச் சமைத்து அசத்தியிருந்தார். எல்லாவற்றையும் ரசித்து ருசித்துச் சாப்பிட்ட அந்த நண்பர் அம்மாவுக்குக் கைகொடுத்து, சமையலை வெகுவாகப் பாராட்டினார். எல்லோரும் சாப்பிட்ட பின் அம்மா அடுக்களைக்குச் சென்றுவிட்டார். நாங்கள் அனைவரும் உட்கார்ந்து பேசிக்கொண்டிருந்தோம். “எங்கே அம்மாவைக் காணோம்? அவருக்கு முக்கிய வேலை எதுவும் இருக்கிறதா?” என்று நண்பர் என்னிடம் கேட்டார். அவர் மதிய உணவைச் சமைக்க ஆரம்பித்துவிட்டார் என்றேன். “என்ன?” என்று நண்பர் அதிர்ந்தார். “ஆம், எங்கள் நாட்டில் பெண்கள் காலை சமையலை முடித்து, சாப்பிட்ட பின், மதிய உணவு தயாரிக்க ஆரம்பித்துவிடுவார்கள். குழம்பு, கூட்டு, பொரியல், ரசம் என்று எல்லாவற்றையும் செய்ய நேரம் வேண்டுமே? இப்போது தொடங்கினால்தான் ஒரு மணிக்குள் முடிக்க முடியும்” என்றேன். “அதற்குப் பிறகு” நண்பர் இழுக்க, “மாலைக்கு பஜ்ஜி, வடை, டீ, பின் இரவுக்கு டிபன்” என்று முடித்தேன். “என்ன கொடுமையாக இருக்கு? உங்கள் உணவு வகைகள் அருமையாகத்தான் உள்ளன. அதற்காக நாள் முழுக்கப் பெண்களை அடுக்களையில் உழைக்கச் செய்வது அநியாயமாக இல்லையா கீதா?” என்றார். என்னிடம் பதில் இல்லை.

“பெண்களிடமிருந்து கரண்டியைப் பிடுங்கிவிட்டு, புத்தகத்தை கொடுத்தால் போதும்” என்று 1938இல், அதாவது 84 ஆண்டுகளுக்கு முன்பு சொன்னவர் தந்தை பெரியார். நமது பெண்கள் படிக்க ஆரம்பித்து கல்வியறிவு பெற்றுவிட்டால், வீட்டைவிட்டு வெளியே பணிபுரியத் தொடங்கிவிடுவார்கள், சமையலறையிலிருந்து விடுபட்டு விடுவார்கள் என்ற எண்ணத்தில் பெரியார் அப்படிச் சொன்னார். நம் பெண்களும் படிக்க ஆரம்பித்துவிட்டார்கள், வேலைக்கும் போக ஆரம்பித்துவிட்டார்கள். ஆனாலும் அவர்களிடமிருந்து இன்னும் கரண்டியைப் பிடுங்க முடியவில்லை.



ஆண் வெளியே சென்று வேலை செய்து பொருளீட்டி வருவான், பெண் வீட்டில் சமையலையும் வீட்டு வேலைகளையும் செய்து குடும்பத்தினரைக் கவனித்துக்கொள்வாள் என்றிருந்த பண்டைய வழக்கம் மாறி, பெரும்பாலான பெண்கள் கல்வி கற்று, வேலைக்குப் போய் சம்பாதிக்க ஆரம்பித்து பல்லாண்டுகள் ஆகின்றன. இருந்தாலும், சமையல் பணியிலிருந்து அவளால் விடுபட முடியவில்லை. பெண்தான் சமையல் செய்ய வேண்டும் என்பதை இந்த ஆணாதிக்க சமுதாயம், பெண்களின், ஆண்களின் மூளைகளில் மிக அழுத்தமாகப் பதித்துள்ளது. அதிலிருந்து மாறவேண்டும் என்பதைப் பல பெண்களாலேயே ஏற்றுக்கொள்ள முடியவில்லை என்பதுதான் நிஜம்.

“மூன்று வேளையும் சமைக்க வேண்டியிருக்கு. அதுவும் ஒவ்வொருத்தருக்கு ஒவ்வொன்று புடிக்கும்” என்று தோழிகள் அலுத்துக்கொள்வதில் நியாயம் இருக்கிறது. ஒவ்வொருவருக்கும் தனித்தனியாகச் சமைப்பது மிகப் பெரிய வேலை. சமையலுக்குத் தனியாக உதவியாளரை வைத்துக்கொள்ளலாமே என்று ஆலோசனை சொன்னால், “எங்கே ஆள் கிடைக்கிறாங்க? ” என்று வருத்தப்படுகிறார்கள். இவற்றிலும் உண்மை இல்லாமல் இல்லை.

ஆனால், நெஞ்சைத் தொட்டு சொல்லுங்கள் தோழியரே, உங்கள் சமையல்கட்டை இன்னொருவருக்கு விட்டுக்கொடுக்க மனமிருக்கிறதா? பெரும்பாலான பெண்களுக்கு மனமில்லை. அதை நேரடியாகச் சொல்லாமல், வேறு காரணங்களைக் காட்டி தட்டிக்கழிப்பார்கள். வேலைக்குப் போகும் பெண்களே தயங்கும் போது, வீட்டில் இருப்பவர்களைப் பற்றி கேட்கவே வேண்டாம். வேலைக்குப் போகும் தோழிகள் கஷ்டப்படுகிறார்களே என்று தெரிந்தவர்களிடம் விசாரித்து, ஏஜென்ஸிகளுக்கு போன் செய்து, யாரையாவது தேடிக் கொடுப்போம். “சரியான நேரத்துக்கு வருவதில்லை.”ருசியாக சமைப்பதில்லை’ என்று ஏதாவது காரணம் சொல்லி பத்துப் பதினைந்து நாட்களிலேயே அந்த உதவியாளரை நிறுத்திவிடுவார்கள். “ அலுவலகம் போயிட்டு, நேரத்துக்கு வடிச்சுக் கொட்ட என்னால முடியவில்லை ” என்று திரும்பவும் புலம்ப ஆரம்பிப்பார்கள்.

இன்னும் சிலர் இருக்கிறார்கள். வசதியான வீடு, வேலைகளுக்கு உதவியாளரும் வீட்டோடு தங்கி இருப்பார். ஆனாலும், அந்த உதவியாளரைச் சமைக்கவிட மாட்டார்கள், “நீ வீட்டைச் சுத்தம் பண்ணி, பாத்திரம் கழுவி, காய்கறி நறுக்கிக் கொடு. நான் சமையலைப் பார்க்கிறேன் ” என்று வரிந்து கட்டிக்கொண்டு சமைப்பார்கள், அந்த உதவியாளருக்கும் சேர்த்துதான்.



அன்பான தோழிகளே, உங்களைக் குறை சொல்வது என் நோக்கமில்லை. ஆனால், சமையல்கட்டை இன்னொருவரிடம் கொடுக்க உங்களுக்கு என்ன தயக்கம்? ஏன் இந்த மனத்தடை? கொஞ்சம் ஆராய்ந்து பார்த்தால், “சமையலும் செய்வதில்லை? அப்புறம் என்ன வேலை உனக்கு?” என்று குடும்பத்தினர் கேட்டுவிடுவார்களோ என்ற பயமும், “ஆமாம், அதைவிட நமக்கு என்ன வேலை?” என்ற தேவையற்ற குற்றவுணர்வும்தான் காரணமாக இருக்கிறது. என்னதான் வேலைக்குப் போய் வெளியே சாதனைகள் செய்தாலும், சமையலால் கிடைக்கும் அங்கீகாரமும் பாராட்டும் பெரும்பாலான பெண்களுக்குத் தேவையாக உள்ளது. ‘அம்மாவின் கைமணம் போல வருமா?’, ‘என் மனைவி சமையலுக்கு ஈடாகுமா?’ என்று சமையலைச் சிலாகித்து வரும் கமெண்ட்டுகள் போதை அளிக்கின்றன. உண்மைதானே?

ஊடகங்களும் இதற்கு ஒரு காரணம். பெண் ரிசர்வ் வங்கியின் துணை கவர்னராகவே இருந்தாலும், “வீட்டில சமைப்பீங்களா? நீங்க சமைக்கறதுல உங்க குழந்தைகளுக்குப் பிடிச்ச ரெசிப்பி என்ன?” போன்ற அநாவசிய கேள்விகளைக் கேட்டு, அவர் வீட்டில் சமைப்பதை உறுதிப்படுத்திக்கொள்கின்றன. “வீட்டில் சமைக்க மாட்டேன்” என்று வெளிப்படையாகச் சொல்லும் பெண்ணை, “நீயெல்லாம் ஒரு பெண்ணா” என்று மறைமுகமாகக் குத்திக் காட்டி பகடி செய்கின்றன. இது அப்பட்டமான உரிமைமீறல்.

ஒரு ரகசியம் சொல்லட்டுமா தோழிகளே? வாழ்நாள் முழுக்கச் சமையல் செய்துகொண்டே இருந்தால், நமக்குப் பிடித்த வேறு வேலைகளைச் செய்ய முடியாது. வேலைக்குப் போவதும் வீட்டுக்கு வந்தால் சமைப்பதுமாக வாழ்க்கை ஓடிவிடும். ‘வயது போன பின்பு, சமைத்த நேரத்தில் படித்திருந்தால் எக்சாமில் பாஸ் பண்ணி ஆபிசரா பிரமோஷன் வாங்கியிருப்பேனே, பிடிச்ச புக்ஸைப் படிக்காம போயிட்டேனே, தியேட்டருக்குப் போய்ப் படம் பார்க்காம போயிட்டேனே, ஃப்ரெண்ட்ஸ் எல்லாம் சேர்ந்து எத்தனை டூர் போனாங்க, என்னால போக முடியலையே, நீச்சல் கற்றுக்கொள்ள ஆசைப்பட்டேன் எங்கே நேரம் இருந்தது, கணவரோட ஊர் சுற்றவே இல்லையே, குழந்தைகளுக்குச் சமைச்சுப் போட்டேனே தவிர, அவங்களோட உட்கார்ந்து ஜாலியா விளையாட முடியலையே, எக்ஸர்சைஸ் பண்ண நேரமில்லாம சுகர், பி.பி.ன்னு இப்ப அவதிப்படறேன்’ என்றெல்லாம் வருத்தப்பட வேண்டி வரும்.

என்னதான் செய்யணும்? சமையல் மீதிருக்கும் உணர்வுப்பூர்வமான பிணைப்பைத் துண்டித்துக்கொள்ளுங்கள் தோழிகளே. இப்படிச் சொல்வதால் சமையலை வெறுக்க வேண்டும் என்று அர்த்தமில்லை. பிடித்த உணவை விரும்பும்போது சமைத்து, ரசித்து உண்டு, மகிழ்ச்சியாக வாழலாம். ஆனால், அந்த உணவை நீங்கள்தான் எல்லா நேரமும் சமைக்க வேண்டும் என்று உங்களுக்கு நீங்களே விதித்துள்ள நிர்பந்தத்தைக் கட்டவிழுங்கள். சமைப்பது பெண்ணின் தேர்வாக இருக்க வேண்டுமேயன்றி, கட்டாயச் சுமையாக அவர்கள் மேல் திணிக்கப்படக் கூடாது. சமைப்பதற்கு, சம்பளம் கொடுத்து ஓர் உதவியாளரை நியமித்துக்கொள்ளுங்கள் தோழிகளே. உங்கள் குடும்பத்திற்கு ஏற்றவாறு அவருக்குச் சமைக்கக் கற்றுக் கொடுங்கள். குறைந்தது மூன்று மாதமாவது அவருடன் சேர்ந்து சமைத்து, நீங்கள் பயிற்சி கொடுக்க வேண்டிவரும்.

(8ஆம் பக்கம் பார்க்க..)



# ஆப்கானிஸ்தானில் சக்திவாய்ந்த நிலநடுக்கம்: 7 பேர் உயிரிழப்பு 150 பேர் படுகாயம்

ஆப்கானிஸ்தானில் நள்ளிரவு 1.59 மணிக்கு சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது. ஆப்கானிஸ்தானில் இந்துகுஷ் மலைத்தொடர் அருகே பல்ஹா மாகாணத்தில் நிலநடுக்கம் ஏற்பட்டது. மசிர் ஐ ஷெரிப் நகரை மையமாக கொண்டு ஏற்பட்ட நிலநடுக்கம் ரிக்டர் அளவில் 6.3 ஆக பதிவானது. மஸார்-இ-ஷெரிஃப் நகரத்துக்கு 28 கி.மீ.க்கு அடியில் நிலநடுக்கம் ஏற்பட்டது. நிலநடுக்கத்தால் வீடுகள், கட்டிடங்கள் பயங்கரமாக குலுங்கின. உடனே பொதுமக்கள் வீடுகளில் இருந்து வெளியேறி சாலைகளில் தஞ்சம் அடைந்தனர். பல கட்டடங்கள் இடிந்துள்ளதால் மீட்பு பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகிறது. முதற்கட்டமாக நிலநடுக்கத்தால் 7 பேர் உயிரிழந்ததாகவும், 150 பேர் காயமடைந்தகவும் தகவல்கள் வெளியாகியுள்ளது. தொடர்ந்து அப்பகுதியில் மீட்பு பணி நடைபெற்று வருகிறது. அதிகாலையில் ஏற்பட்ட சக்தி வாய்ந்த நிலநடுக்கத்தை ஒட்டி ஆரஞ்ச் அலரட் விடுக்கப்பட்டுள்ளது. மசார்-இ-ஷெரீப்பில் உள்ள ப்ளூ மசூதிக்கு கடுமையான சேதம் ஏற்பட்டுள்ளது. இந்த இடம் இஸ்லாத்தின் நான்காவது கலீபாவும் நபிகள் நாயகத்தின் மருமகனுமான ஹஸ்ரத் அலியின் அடக்கம் செய்யப்பட்ட இடம் என கூறப்படுகிறது. (ஐ)


# ஹார்வர்ட் மருத்துவ கல்லூரியில் குண்டுவெடிப்பு




அமெரிக்காவின் பாஸ்டன் நகரில் ஹார்வர்டு பல்கலைகழகத்தில் மருத்துவ கல்லூரி செயல்பட்டு வருகிறது. இந்த மருத்துவ கல்லூரியின் லாங்வுட் வளாகத்தில் நேற்று முன்தினம் குண்டுவெடிப்பு ஏற்பட்டது. இதில் யாருக்கும் காயம் ஏற்படவில்லை என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஹார்வர்டு பல்கலைகழகம் வெளியிட்ட அறிக்கையின்படி, பல்கலைக்கழகத்தின் லாங்வுட் வளாகத்தில் உள்ள கோல்டன்சன் கட்டிடத்தின் நான்காவது மாடியில் அதிகாலை 3 மணிக்கு குண்டுவெடிப்பு நிகழ்ந்தது. சம்பவம் நடந்த நேரத்தில் இரண்டு நபர்கள் சம்பவ இடத்திலிருந்து தப்பி ஓடியதைக் கண்டதாக ஹார்வர்ட் பல்கலைக்கழக காவல் துறையினர் தெரிவித்துள்ளனர். இது குறித்து போலீசார் விசாரிக்கின்றனர். (ஐ)





# சர்ச்சையை கிளப்பிய பிரபல மாடல் அழகி நிலவில் மனிதன் கால் பதிக்கவே இல்லை..! 'நாசா' விஞ்ஞானியின் பதிலடியால் பரபரப்பு

பிரபல அமெரிக்க மாடல் அழகியும், தொலைக்காட்சி பிரபலமுமான கிம் கர்தாஷியன், நிலவுக்கு மனிதன் சென்றது குறித்த சர்ச்சையான கருத்தைக் கொண்டிருப்பதாக பல ஆண்டுகளாக இணையத்தில் வதந்திகள் பரவி வந்தன. எனினும், அவை பெரும்பாலும் நம்பத்தகுந்த ஆதாரமற்ற கேலிச் செய்திகளாகவே கருதப்பட்டு வந்தன. இந்த வதந்திகளுக்கு இதுவரை கிம் கர்தாஷியனோ அல்லது நாசா அமைப்போ எந்தவிதமான பதிலும் அளிக்காமல் இருந்து வந்த நிலையில், தற்போது முதல்முறையாக கிம் கர்தாஷியன் தனது நிகழ்ச்சியிலேயே இதுகுறித்து வெளிப்படையாகப் பேசியிருப்பது பெரும் புயலைக் கிளப்பியுள்ளது.

தனியார் சேனலுக்கு அவர் அளித்த பேட்டியில், 'கடந்த 1969ம் ஆண்டு அப்போலோ - 11 என்ற விண்கலம் மூலம் மனிதர்கள் நிலவில் தரையிறங்கியது ஒரு நாடகம். அதுபோன்று ஒன்றும் நடக்கவில்லை. குறிப்பாக, நிலவில் காற்று இல்லாதபோது அமெரிக்கக் கொடி எப்படி அங்கு அசைந்தது? விண்வெளி வீரர் பஸ் ஆல்ட்ரினின் தவறாக மேற்கோள் காட்டப்பட்ட கருத்து, நிலவின் புகைப்படங்களில் நட்சத்திரங்கள் ஏன் இல்லை?' போன்ற கேள்விகளை முன்வைத்தார். இந்த நிகழ்ச்சி ஒளிபரப்பானதைத் தொடர்ந்து, நாசாவின் தற்போதைய நிர்வாகியான சீன் டஃபி, தனது சமூக வலைதளப் பக்கத்தில் கிம் கர்தாஷியனுக்குப் பதிலடி கொடுத்துள்ளார். அவர் வெளியிட்ட பதிவில், 'ஆம்... கிம் கர்தாஷியன், நாங்கள் இதற்கு முன்பு 6 முறை நிலவுக்குச் சென்றுள்ளோம். அதைவிட சிறந்த செய்தி ஒன்று உள்ளது.

அதிபரின் தலைமையில் நாசாவின் ஆர்ட்டெமிஸ் திட்டம் மீண்டும் நிலவுக்குச் செல்லவிருக்கிறது. இத்திட்டத்தின்படி மனிதர்களை மீண்டும் நிலவுக்கு அனுப்புவோம். நீங்கள் கென்னடி விண்வெளி மையத்தில் நடைபெற உள்ள ஆர்ட்டெமிஸ் திட்டத்தின் ஏவுதல் நிகழ்வைக் காண வரவேண்டும்' என்று அவர் அழைப்பும் விடுத்துள்ளார். (ஐ)

## தமிழ்மக்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

யாழ். மாநகர ஆளுகைக்குள் உள்ள இலக்கம் 58, சேர் பொன் இராமநாதன் வீதியில் இந்த அலுவலகம் திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் சட்டத்தரணி வி.மணிவண்ணன் உள்ளிட்ட கட்சியின் மத்திய குழு உறுப்பினர்களுடன் மன்னார், வவுனியா மாவட்டங்களின் அமைப்பாளர்கள், உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், கட்சியின் ஆதரவாளர்கள், செயற்பாட்டாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்..

நிகழ்வில் இறுதியில் கட்சியின் மகளிர் அணியினரின் ஏற்பட்டில் பாடசாலை மாணவி ஒருவருக்குக் சைக்கிள் ஒன்று வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## சஜித்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இந்த விஜயத்தின் போது அவர் தொடர்ச்சியான உத்தியோகபூர்வ நிகழ்வுகளிலும் கலந்துகொள்வார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

## கிளிநொச்சியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சந்தேகநபர் ஒருவரை அதிகாரிகள் கைது செய்ய முற்பட்டனர்.

இதன்போது, இரும்புக் கம்பிகள் மற்றும் பொல்லுகள் சகிதம் அங்கு வந்த குழுவொன்று அதிகாரிகளைத் தாக்கி, சந்தேகநபரை விடுவித்துக் கொண்டு அந்த இடத்திலிருந்து தப்பிச் சென்றுள்ளனர்.

இதையடுத்து, அதிகாரிகள் மீது தாக்குதல் நடத்தியமை தொடர்பில் இராமநாதபுரம் பொலிஸ் நிலைய அதிகாரிகள் குழுவொன்று இந்தக் குழுவினரைக் கைது செய்துள்ளது.

தாக்குதலில் காயமடைந்த விசேட அதிரடிப் படையின் அதிகாரிகள் இருவர் கிளிநொச்சி வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இராமநாதபுரம் பிரதேசத்தைச் சேர்ந்த 16 முதல் 32 வயதுக்கு இடைப்பட்ட சந்தேகநபர்களும், 26 முதல் 45 வயதுக்கு இடைப்பட்ட பெண் சந்தேகநபர்களுமே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

## 3ஆயிரத்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

இரகசியத் தகவலுக்கமைய கஸ்தூரியார் வீதியில் மோட்டார் சைக்கிளில் சந்தேகத்துக்கிடமான முறையில் பயணித்த அவர்களைச் சோதனையிட்டபோதே போதை மாத்திரைகள் வைத்திருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

ஐந்து சந்திபி பகுதி அருகில் வசிக்கும் 21 வயது மதிக்கத்தக்க இரண்டு இளைஞர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

போதைப்பொருள் தொடர்பாக பொலிஸாரின் கைது நடவடிக்கை தீவிரமடைந்துள்ள நிலையில் அதற்கான தட்டுப்பாடு காரணமாக சந்தேகநபர்கள் பத்து போதை மாத்திரைகள் அடங்கிய அட்டையை 3 ஆயிரம் ரூபா வரை விற்பனை செய்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

மேலதிக விசாரணைகளுக்குப் பின்னர் சந்தேகநபர்களை யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப் பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

## புதனன்று...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கட்சித் தலைவர் சி.வி.கே. சிவஞானம் தலைமையில் நடைபெறவுள்ள இந்தக்கூட்டத்தில்கட்டாயம்பங்கேற்குமாறு மத்திய குழுவின் அனைத்து உறுப்பினர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

2026 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம், மாகாண சபைத் தேர்தல், அரசியல் தீர்வை வென்றெடுப்பதற்குரிய நகர்வுகள் உட்பட முக்கிய பல விடயங்கள் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்படவுள்ளன.

அதேவேளை, இலங்கைத் தமிழரசுக் கட்சிக்கும், தேசிய மக்கள் சக்தி அரசுக்கும் இடையில் விரைவில் சந்திப்பு இடம்பெறவுள்ளது எனத் தகவல் வெளியாகியுள்ளது.

# பரந்தன் பகுதியில் இராணுவத்தினர் வசமிருந்த தனியாருக்கு சொந்தமான காணி விடுவிப்பு!

கிளிநொச்சி மாவட்டம், கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவில் பரந்தன் பகுதியில் இராணுவத்தினர் வசமிருந்த தனியாருக்கு சொந்தமான 1.5 ஏக்கர் காணி இன்று விடுவிக்கப்பட்டுள்ளது.

விடுவிக்கப்பட்ட காணியின் ஆவணத்தை கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் எஸ்.முரளிதரனிடம், மாவட்ட செயலகத்தில் வைத்து இராணுவத்தினர் இன்று கையளித்திருந்தனர்.

# வவுனியாப் பல்கலைக்கழக மாணவனின் திடீர் மரணம்– பகிடிவத்தையே காரணம் என உறவினர் குற்றச்சாட்டு!

வவுனியாப் பல்கலைக்கழகத்தின் தகவல் தொழில்நுட்ப பீடத்தில் முதலாம் ஆண்டில் கல்வி பயிலும் மாணவர் ஒருவர் நேற்றுமுன்தினம் சடலமாக மீட்கப்பட்டார்.

இவரது உயிரிழப்புக்கு பகிடிவதையே காரணம் என மாணவனின் உறவினர்கள் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவது,

கடந்த வெள்ளிக்கிழமை மாலை முதல் நள்ளிரவு வரை பல்கலைக்கழகத்தில் மாணவர்களின் மது விருந்துபசாரம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இதன்போது குறித்த மாணவனுக்கு மது கட்டாயப்படுத்தி கொடுக்கப்பட்டதாக உறவினர்கள் தெரிவிக்கின்றனர்.

நள்ளிரவு 12 மணியளவில் குறித்த மாணவனை பிறிதொரு மாணவனின் விடுதியில் மாணவர்கள் கொண்டு சென்று விட்டுள்ளனர்.

சனிக்கிழமை காலை குறித்த மாணவன் எழுந்திருக்காத நிலையில், ஏனைய மாணவர்கள் குறித்த மாணவனை பூவரசன் குளம் வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

எனினும் மாணவன் ஏற்கனவே உயிரிழந்து விட்டதாக வைத்தியர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்தநிலையில், இந்தத் திடீர் மரணத்திற்கு பகிடிவதையே காரணம் என மாணவரின் உறவினர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

விசாரணையின் போது உயிரிழந்த மாணவரின் சகோதரி தெரிவிக்கையில்,

கடந்த 31ஆம் திகதி இரவு பல்கலைக்கழக மாணவர்களின் விருந்தொன்றில் சிரேஷ்ட மாணவர்கள் தனது சகோதரருக்கு பலவந்தமாக மதுபானம்வழங்கியதாகவும், தனது சகோதரனுக்கு வேறு எந்த நோயும் இருந்திருக்கவில்லை என்றும், பல்கலைக்கழகத்தில் இடம்பெறும் பகிடிவதை குறித்து பல தடவைகள் குடும்ப உறுப்பினர்களுக்கு தகவல் தெரிவித்ததாகவும் சகோதரி தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஊழியர் சேமலாப நிதியச் சட்டத்தை திருத்தம் செய்ய தீர்மானம்




ஊழியர் சேமலாப நிதியத்தின் (நூீகு) உறுப்பினர்களின் வசதிக்காகவும், அதிக பலன்களைப் பெற்றுக்கொடுக்கும் நோக்கிலும், ஊழியர் சேமலாப நிதியச் சட்டத்தை திருத்தம் செய்ய தொழிலாளர் அமைச்சு தீர்மானித்துள்ளது.

தொழிலாளர் அமைச்சு வெளியிட்டுள்ள அறிவிப்பில், இந்தச் சட்டம் மூலம் கீழ்க்கண்ட விடயங்களைத் திருத்த முன்மொழியப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது:

அபராதம் மற்றும் அபராதம் அறவிடும் பொறிமுறையை மேலும் வினைத்திறன்மிக்க நிலைக்குக் கொண்டு வருதல்.

வர்த்தக வங்கிகளுக்குப் பதிலாக, ஊழியர் சேமலாப நிதியம் ஊடாக அதன் உறுப்பினர்களுக்குக் கடனுதவி வசதிகளை வழங்குதல்.

ஆண் மற்றும் பெண் தொழிலாளர்களின் உரிமைகள் தொடர்பில் தற்போதுள்ள சமத்துவமின்மையை நீக்குதல்.

இது தொடர்பாக நேற்றுமுன்தினம் (30) தொழிலாளர் ஆலோசனைக் குழுவில் விசேட கவனம் செலுத்தப்பட்டது. இதில் தொழிலாளர் அமைச்சர் கலாநிதி அனில் ஜயந்த பெர்னாண்டோ, பிரதி அமைச்சர் மகிந்த ஜயசிங்க மற்றும் இலங்கை முதலாளிமார் சம்மேளனம், தொழிற்சங்கப் பிரதிநிதிகள் கலந்துகொண்டனர்.

அமைச்சர் அனில் ஜயந்த பெர்னாண்டோ கருத்துத் தெரிவிக்கையில், முதலாளிகளிடமிருந்து அபராதம் அறவிடும் பொறிமுறையானது சிக்கலற்றதாக இருக்க வேண்டும் என்றும், இதன் மூலம் உரிய அபராதங்களை துரிதமாக அறவிட வாய்ப்பு கிடைக்கும் என்றும் குறிப்பிட்டார்.

இதன்போது தோட்டத் தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்பு தொடர்பாகவும் கவனம் செலுத்தப்பட்டது. அப்போது கருத்துத் தெரிவித்த பிரதி அமைச்சர் மகிந்த ஜயசிங்க, தோட்டத் தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்பு தொடர்பாக ஆக்கபூர்வமான நம்பிக்கையை வைத்திருக்க முடியும் என்று தெரிவித்தார்.

# சமையலறையை.....

அதற்கு நானே சமைத்துவிடுவேனே என்று சலித்துக்கொண்டால், வாழ்நாள் முழுக்க இந்தப் பணியிலிருந்து விடுபட முடியாது. அவரது பணிக்கு ஏற்ற, நல்ல சம்பளம் கொடுங்கள். உங்கள் வீட்டிலேயே சாப்பிடச் செய்து குடும்பத்தில் ஒருவராக நடத்துங்கள். அவருக்கு இருக்கும் பிரச்சினைகளைக் கேட்டு தீர்க்க முயற்சி செய்யுங்கள். வாரம் ஒரு நாள் விடுமுறை கொடுங்கள். அந்த உதவியாளர் உங்களை விட்டுப் போக மாட்டார்.

உதவியாளரை வைத்துக்கொள்ளும் அளவுக்கு வசதி இல்லாத தோழிகள் என்ன செய்வது? ஆரம்பத்திலேயே, குடும்பத்தில் கணவருக்கும் குழந்தைகளுக்கும் சமைக்கக் கற்றுக் கொடுத்துவிடுங்கள். அவர்கள் அரைகுறையாகவே செய்தாலும் குறைசொல்லாமல், பாராட்டி ஊக்கப்படுத்துங்கள். மூன்று வேளை சமையலில், ஒரு வேளை அவர்கள் சமைக்க வேண்டும் என்று பணியை பிரித்துக் கொடுங்கள். வாரத்திற்கு ஒரு நாள் நீங்கள் சமைக்காமல், மூன்று வேளையும் அவர்களையே சமைக்கச் செய்யுங்கள். நீங்கள் செய்தால்தான் எல்லாம் ருசியாக இருக்கும் என்ற 'பெர்ஃபெக்சனிஸ்ட் கிரீடத்தை' கழற்றிவையுங்கள்.

அது கிரீடமல்ல, மிகப்பெரிய சுமை. முறையாக யார் சமைத்தாலும், உணவு ருசிக்கும்.

உதவியாளரையும் வைத்துக்கொள்ள முடியாது, வீட்டில் யாரும் சமைக்க மாட்டேன் என்கிறார்கள் என்ற நிலை இருந்தால், பக்கத்தில் தரமான மெஸ்ஸோ ா ஹோட்டலோ இருந்தால் ஒருவேளைக்காவது அங்கு வாங்கிக்கொள்ளலாம். இப்போதெல்லாம் நோன்வெஜ் குழம்பு, சாம்பார், ரசம், பொரியல், கூட்டு என்று எதை வேண்டுமானாலும் தனியாக வாங்கிக்கொள்ளும் வசதி வந்துவிட்டது. சத்தான உணவில் சமரசம் செய்யாமல், எதைச் செய்ய அதிக நேரம் பிடிக்கும் என்று திட்டமிட்டு, அதை மட்டும் வெளியே வாங்கலாம். கீரை சூப், முளைக்கட்டிய பாசிபயறைச் சேர்த்துப் பச்சை காய்கறிகளை நறுக்கிப் போடும் சாலட், வேகவைத்த முட்டை ஆகியவற்றை குறைந்த நேரத்தில், எளிமையாகச் செய்துவிடலாம். குழம்பு, சாம்பார், பொரியல், கூட்டு போன்றவற்றை மெஸ்ஸில் வாங்கிவிடலாம். ராகிக் கூழ், கம்மங்கூழ் ஆகியவற்றை முந்தைய நாள் இரவிலேயே காய்ச்சி வைத்துவிடலாம். மறுநாள் காலை உப்பு, மோர் சேர்த்து காலை உணவாகவே கொடுக்கலாம். இது ஓர் உதாரணத்திற்குத்தான். குறைந்த நேரத்தில், எளிமையாகச் செய்யும் சத்தான உணவு வகைகள் ஏராளம். அவற்றைச் செய்துவிட்டு, உங்களுக்குப் பிடித்த பணிகளுக்கான நேரத்தை ஒதுக்குவது உங்கள் சாமர்த்தியம் தோழியரே.

தோழர்களே, சமையலைக் குடும்பத்தின் கூட்டுப் பொறுப்பாக்க வேண்டும். சமையலில், மனைவிக்கு உதவி செய்துகொண்டுதான் இருக்கிறேன் என்ற நிலையிலிருந்து அடுத்த கட்டத்திற்குச் செல்ல வேண்டும். கணவர் ஒருவேளை சமையலையாவது முழுமையாகப் பொறுப்பேற்று செய்யத் தொடங்க வேண்டும்.

இந்தப் பிரச்சினைக்கு நிலையான, நீண்ட காலத்தீர்வு பெரியார் பரிந்துரைத்த ஹகம்யூனிட்டி கிச்சன்' என்ற சமுதாய சமையலறை. இன்னும் இதனைச் சோதனை அளவில்கூட முயற்சி செய்யக்கூட இந்த ஆணாதிக்க சமுதாயம் தயாராக இல்லை. அரசே இதனை உருவாக்க வேண்டும். மாதத்திற்கு இவ்வளவு என்ற அளவில் நியாயமான கட்டணத்தைச் செலுத்திவிட்டு, குடும்பம் மொத்தமும் தினமும் அங்கே சாப்பிட்டுக்கொள்ளும் முறையை உருவாக்கினால் பெண்களுக்கு மிகப்பெரிய விடுதலை கிடைக்கும். கொடுமையான ஜாதியக் கட்டமைப்பை ஒழிப்பதற்கான முதல் படியாகவும் இது இருக்கும். பெண்கள் சமைப்பதற்குச் செலவழிக்கும் நேரத்தையும், ஆற்றலையும் தாம் பணியாற்றும் துறைகளில் செலுத்தினால், அந்தந்தத் துறைகளில் கொள்கை முடிவுகள் எடுக்கும் உயர்நிலையை அடைய முடியும். சமுதாயத்தின் முன்னேற்றத்திற்கு மிகப்பெரிய பங்காற்ற முடியும் தோழர்களே!







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 03.11.2025 வெளியிடப்பெற்றது.